முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.25.03.2026

O.S No. 220/2022

வா.சா.2-செந்தில் குமாரி

2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரி. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க என் தம்பியின் வக்கீல் எனக்கு போன் செய்து வரச்சொன்னார். செல்லநாடாரின் வாரிசு என்பதை காட்ட ஆவணம் எதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 1ம் பிரதிக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் ஆவணம் குறித்த விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2022 ஆக இருக்கலாம். தேதி , மாதம் ஞாபகம் இல்லை. 1ம் பிரதிக்கு கொடுக்கவேண்டிய பணத்தை செலுத்துவதற்கு எதும் முயற்சி எடுத்தேனா என்றால் எனக்கு அந்த ஆவணத்தை பற்றிய விவரமே தெரியாது.

என் தம்பி சொல்லிகொடுத்த விவரத்தை நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. எனக்கு லதா என்ற ஒரு சகோதரி உள்ளார். வாசாஆ 3 ஆவணத்தில் என் சகோதரி சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரி. உயில் ஆவணத்தில் என் சகோதரி சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரி. எனது முதன்மை சாட்சியத்தில் 21.01.2009 ம் தேதி எழுதிய உயில் ஆவணம் யார் எழுதியது என்றால் என் அப்பா கைப்பட எழுதவில்லை வேறு யாரையாவது வைத்து எழுதி இருப்பார். அந்த நபரின் விவரத்தை நான் கேட்கவில்லை.

உயில் ஆவணம் எழுதி எத்தனை நாட்கள் கழித்து நான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆவணம் எழுதிய அதே தேதியில் மதியம் போல் கையொப்பம் செய்தேன். அதில் என்னுடன் அம்மாவும் கையொப்பம் செய்தார். வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை. வேறு யாராவது கையொப்பம் செய்த ஆவணத்தை தாக்கல் செய்திருந்தால் அது தவறு

என்றால் எனக்கு தெரியாது. உயிலில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். தெங்கம்புதுர் கிராமத்தில் 538/2 , கன்னியாகுமரியில் உள்ள சர்வேஎண் எனக்கு ஞாபகம் இல்லை. வீட்டு கதவு எண் 6/6E ஆகும். அதன் 4 எல்லைகள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும்.

புத்தளம் சொத்திற்கு கிழக்கே பாலசுப்ரமணியம் சொத்து, வடக்கு சண்முகம் சொத்து, தெற்கு பெரியப்பா குமாரவேல் சொத்து, மேற்கே ரோடு. கன்னியாகுமரி சொத்தின் 4 எல்லைகள் சரியாக தெரியாது. 538/2 சொத்தை தான் 1 ம் பிரதிக்கு என் அம்மா எழுதிக்கொடுத்தார் என்றால் தெரியாது. வாசாஆ 3 பதிவு செய்த ஆவணம் என்றால் சரி.

வாசாஆ 4 ஆவணத்தை இந்த வழக்கிற்காக என் சகோதரனுடன் சேர்ந்து தயார் செய்துள்ளேன் என்றாலும் வாசாஆ 4 ஆவணத்தின் படி எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் என் சகோதரனுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இந்த வழக்கின் கேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.